நாட்டுக்கோழி வளர்ப்பில் கோழிக்குஞ்சுகளின் இறப்பை குறைக்க வழிமுறைகள் மற்றும் குடிநீர் மேலாண்மை

முனைவர். மா. அர்த்தனாரிஈஸ்வரன்,
கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆரய்ச்சி நிலையம், திருப்பூர்.

பொதுவாக கிராமப்புறங்ககளில் வீடுதோறும் புறக்கடையில் நாட்டுக்கோழிகள் இறைச்சிக்காக வளர்க்கப்படும். இவ்வாறு நாட்டுக்கோழிகளை வளர்க்க எவ்வித பெரிய தொழில்நுட்பமும் தேவைப்படுவதில்லை. வீட்டிலுள்ள இடுபொருட்களைக் கொண்டே நாட்டுக்கோழிகள் வளர்க்கப்படுகின்றன. குறைந்த எண்ணிக்கையில் நாட்டுக்கோழிகள் வளர்க்கப் படும் போது பெரிய அளவில் எந்தவித பராமரிப்பும், கண்காணிப்பும் தேவையில்லை. ஆனால் அதிக எண்ணிக்கையில் நாட்டுக்கோழிகள் வளர்க்கும் போது சீரிய முறையில் பராமரிக்கப் படவேண்டும். நாட்டுக்கோழிக் குஞ்சுகளை வளர்க்கும் முறை பற்றி இங்கே விளக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்கோழிகளில் பிறந்த முதல் நாள் வயதிலிருந்து 4 வார வயதுள்ள கோழிக்குஞ்சுகள் "இளங்குஞ்சுகள்" என்று அழைக்கப்படுகின்றன. புறக்கடைகளில் வளர்க்கப்படும் நாட்டுக் கோழிகளின் குஞ்சுகளுக்கு செயற்கை வெப்பம் அளிக்கப்படுவதில்லை. தாய்க்கோழியே தனது இறகுகளினால் மூடி குஞ்சுகளுக்குத் தேவையான வெப்பத்தையும், பாதுகாப்பையும் அளிக்கிறது. வணிக நோக்கில் பண்ணைகளில் அதிக எண்ணிக்கையில் நாட்டுக் கோழிக்குஞ்சுகள் பராமரிக்கப்படும் போது செயற்கை வெப்பம் அளிக்கப்படுகிறது.

குஞ்சுகள் பண்ணக்கு வரும் முன் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள்

1. குஞ்சுகளுக்கான கொட்டகையைத் தயார் செய்தல்

புதிய பண்ணையாக இருந்தால் நன்றாகக் கழுவி, சுத்தம் செய்து சுண்ணாம்பு கொண்டு வெள்ளையடிக்க வேண்டும். பழைய கொட்டகையாக இருந்தால் எருவைக் குவித்து வைத்து, ஒரு வாரத்திற்கு அப்படியே மக்க செய்து பின் எருவை அப்புறப்படுத்தவேண்டும். பிறகு கொட்டகையில் உள்ள தண்ணீர் மற்றும் தீவன பாத்திரங்களை வெளியே எடுத்து தண்ணீர் கொண்டு கழுவி பின் கிருமிநாசினி கலந்த தண்ணீரில் ஊறவைத்துக் கழுவி சுத்தப்படுத்த வேண்டும். பிறகு அவற்றை சூரிய ஒளியில்/வெயிலில் உலர்த்தி தயராக வைத்திருக்க வேண்டும். பழைய ஆழ்கூளத்தை அகற்றி, நெருப்பு கொண்டு ஒட்டடைகளை நீக்கி அதன் பின் கொட்டகையைத் தண்ணீர் விட்டுக் கழுவி காயவிடவேண்டும். பின்னர் கொட்டகைக்கு சுண்ணாம்பு வெள்ளையடிக்க வேண்டும். கொட்டகை வாயிலில் கிருமிநாசினி நிரப்பிய கால்வாய் தயார் செய்வதால் கிருமிகள் உள்நுழைவதைப் பெருமளவில் குறைக்கலாம்.

இளம்கோழிக்குஞ்சுகளை அடைகாப்பானில் பராமரித்தல்

குஞ்சுகளுக்கு பால் இறகுகள் வளர்ந்து முழு வளர்ச்சியடையும் வரை தன்னுடைய உடல்வெப்பநிலையை ஒரேசீராக வைத்துக் கொள்ளமுடியாத காரணத்தால் செயற்கை முறையில் அவற்றிற்கு வெப்பம் (95°F) கொடுப்பது மிகவும் அவசியம். கொட்டகையின் இருபுறமும் தார்பாய் அல்லது கோணிப்பை கொண்டு மூடுவதால் குளிர்காற்று குஞ்சுகளைத் தாக்காவண்ணம் காப்பாற்றலாம். இதை முதல் 2-3 வாரங்களுக்கு பகலில் மூடியும், இரவில் திறந்தும் வைக்கவேண்டும்.

குஞ்சுகள் வருவதற்குமுன் சிறு சிறு அடைப்பான்களாகப் பிரித்து தயார்நிலையில் வைத்திருக்கவேண்டும். இதனால் குஞ்சுகள் குளிரினால் நெருங்கி அடைந்து இறப்பதைத் தவிர்க்கலாம். அடைகாப்பானானது 1 முதல் 1 1/2 அடி உயரமுள்ள அட்டை அல்லது தகரத் தடுப்புக்களைக் கொண்டு 5 முதல் 6 அடி விட்டமுள்ள வட்டவடிவ அறைகளாகப் பிரித்து பராமரிக்கவேண்டும். ஒரு அறையில் 200-250 குஞ்சுகளை வளர்க்கலாம்.

தரையில் சுத்தமான செய்தித்தாள் அல்லது காகிதம் கொண்டு விரிப்பை ஏற்படுத்தி முதல் 7-10 நாட்களுக்குப் பயன்படுத்த வேண்டும். ஈரம் அதிகமாகும்போது தேவைப்படின் தினமும் இந்த காகிதவிரிப்பை மாற்றவேண்டும். பின்பு தரையில் 5 செ.மீ உயரத்திற்கு நெல் உமி அல்லது வேர்க்கடலைத்தோல் அல்லது மர இழைப்புத்தூள் கொண்டு பரப்புவதால் குஞ்சுகளின் எச்சத்திலுள்ள ஈரப்பதத்தை உறிஞ்சிவிடும். அறை வெப்பநிலை பகலில் குறைவாக இருக்கும்போதும், இரவிலும் குஞ்சுகளுக்கு 1 அல்லது 2 வாட் என்ற அளவில் செயற்கை வெப்பம் கொடுக்கப்படவேண்டும். இதற்காக 60 அல்லது 40 வாட் மின்சார விளக்குகளை ஒரு அடி உயரத்தில் தொங்கவிட்டு பயன்படுத்தலாம். வாரம் ஒரு அடி உயரம் உயர்த்தி மூன்றாவது வாரம் முடிந்தவுடன் ஒரு விளக்கை மட்டும் கொட்டகையினுள் தொங்கவிடலாம்.

இளங்குஞ்சுகளில் இறப்பைத்தவிர்க்க போதுமான இடவசதி, இடைவெளி, தீவனம், சுத்தமான குடிநீர், காற்றோட்டம் ஆகியவை வழங்கப்படவேண்டும். குஞ்சுகளின் எண்ணிக்கைக்கேற்ப தேவையான எண்ணிக்கையில் தீவன மற்றும் குடிநீர் தொட்டிகள் வைக்கவேண்டும். தினமும் தீவன மற்றும் குடிநீர் தொட்டிகள் தண்ணீரில் கழுவிப் பயன் படுத்தவண்டும். குஞ்சுகள் வளர்ந்து பெரியவையாகும்போது அடைப்பானை அகலப்படுத்தி பின் 3 வாரங்களுக்குப் பிறகு முற்றிலும் எடுத்துவிடவேண்டும். பொதுவாக 50% குஞ்சுகள் சுறுசுறுப்பாக சுற்றித் திரிந்தும், மற்றவை தூங்கிக்கொண்டிருக்கும். குஞ்சுகள் நெருக்கியடித்துக் கொள்ளாமல் சமஅளவில் சுற்றித்திரிந்தால் வெப்பநிலை மிதமாக உள்ளதை உறுதிப்படித்திக்கொள்ளலாம். மின்வெட்டுக் காலங்களில் கரி அல்லது எரிவாயு அடுப்பைப் பயன்படுத்தி வெப்பத்தை அளிக்கலாம்.

குஞ்சுகளுக்கு தீவனம் மற்றும் குடிநீர் பராமரிப்பு

இளம் குஞ்சுகளுக்கு எப்பொழுதும் தீவனமும் குடிநீரும் கிடைகும்படி இருப்பது அவசியம். இளம் குஞ்சுகளுக்கு பசி ஏற்படுவத்ற்காகவும், தீவனம் நன்கு செரிமானம் ஆவதற்கும் பி- காம்ப்ளக்ஸ் வைட்டமிங்களும், நோய் எதிர்ப்புத் திறன் உண்டாவதற்கு ஏ-வைட்டமிங்களும் குடிநீரில் கலந்து கொடுக்க வேண்டும்.

நோய் பாதுகாப்பு

இளம்குஞ்சுகள் எளிதில் நோய்த் தொற்றுக்கு ஆளாகின்றன. இதைத் தவிர்க்க சிறந்த பண்ணைச் சுகாதாரம், உயிர்ப் பாதுகாப்பு மற்றும் சிறந்த தடுப்பூசிகளைப் பயன்படுத்த வேண்டும். கால்நடை மருத்துவர் உதவியுடன் தக்க வயதில் தேவையான தடுப்பூசிகளை முறையாக அளிக்க வேண்டும்

தினமும் இளம்குஞ்சுகளை பராமரித்த பிறகே வளர்ந்த கோழிகளை கவனிக்கவேண்டும். இதனால் நோய்த்தொற்று ஏற்படுவதைத் தடுக்கலாம். மேலும் ஒருமாத வயதில் குடல்புழு நீக்கமருந்தினைக் கொடுக்கவேண்டும். ஆழ்கூளத்தை தக்கமுறைகளைக் கடைபிடித்து வறட்சியுடன் பராமரிக்கவேண்டும். ஏனென்றால் ஆழ்கூளம் மிகவும் வறட்சியாகக் காணப்பட்டால் அது புழுதியை உண்டாக்கும். அதனால் சுவாசக் கோளாறு நோய்களை ஏற்படுத்தும். மேலும் ஆழ்கூளம் அதிக ஈரப்பதத்துடன் காணப்பட்டால் அது பூஞ்சை வளர ஏதுவாகும். இப்பூஞ்சை கோழிக்குஞ்சுகளில் நிமோநியாவை ஏற்படுத்தி இறப்பினை உண்டாக்கும். அவ்வாறு நோய் ஏற்பட்டிருக்கும் போது துத்தநாகம்/ காப்பர் ஸல்ப்பேட் 50 கிராம் / 250 மிலி வினிகர்+750 மிலி லிட்டர் நீரில் கலக்கவேண்டும். இதிலிருந்து 2 மிலி / லிட்டர் நீரில் கலந்து 5 நாட்களுக்குக் கொடுக்கவேண்டும். புதிய ஆழ்கூளத்தைப் பயன்படுத்தவேண்டும்.

நோய்த்தடுப்பு அட்டவணை

5-7 வது நாள்- இராணிகெட் எப்-1 தடுப்பூசி- நாசி/கண் வழியாக

28 வது நாள்- இராணிகெட் லசோட்டா தடுப்பூசி- நாசி/கண் வழியாக

35 வது நாள்-கோழி அம்மை நோய் (தேவைப்படின்)

பிறந்த கோழிக் குஞ்சுகளில் வெப்ப அயற்சியினால் ஏற்படும் விளைவுகள்

இளம்கோழிக்குஞ்சுகள் சுற்றுப்புறக் காரணிகளால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. சுற்றுப்புற வெப்பநிலை மற்றும் ஈரப்பத மாற்றம் குஞ்சுகளின் உடலில் ஈரப்பதம் குறைவதற்கும், இறப்பிற்கும் காரணமாகின்றது. பிறந்த குஞ்சுகள் போக்குவரத்து/ இடமாற்றம் செய்தல் மற்றும் நாம் கையாளுவதாலும் அவற்றின் உடல் ஈரப்பதம் குறைந்து பெரும் அயற்சிக்கு ஆளாகிறது. பிறந்த குஞ்சுகளால் தன்னுடைய உடல் வெப்பநிலையை சரியாகவும் சீராகவும் வைத்துக் கொள்ள இயலாது. இதனால் வெப்ப அயற்சிக்கு ஆளகிறது. மேலும் வாய்வழியாக சலவாய் இளப்பு ஏற்படுகிறது. முட்டையிலிருந்து வந்த மஞ்சள் கரு சத்துக்களை உறிஞ்சிக்கொள்வது குறைகிறது.

மேலும் வெப்ப அயற்சியினை குறைக்க தன்னுடைய சுவாசத்தினை அதிகரிக்கின்றது. இதனால் கோழிக்குஞ்சுகளின் உடலில் தாது உப்புகளின் (எலக்ரோலைட்) இழப்பு ஏற்படுகின்றது. இதனை ஈடுகட்ட குளுகோஸ், மோர் மற்றும் எலுமிச்சை சாற்றைக் கொடுப்பதன் மூலம் அயற்சி, கார மற்றும் அமில சமநிலை சரிசெய்யப்படுகிறது. கோழிக்குஞ்சுகளுக்கு சரியான அளவு தீவனம் அளிப்பதன் மூலம் அது பாதுகாப்பானதாகவும், எளிதாக செரிக்கப்பட்டும், அவசியமான சத்துக்களை உடலுக்கு அளிக்கும் வகையிலும் அமையும். குஞ்சுகளில் நீரிழப்பை சரிசெய்வதன் மூலம் மஞ்சள் கரு உறிஞ்சப்படுவதும் எளிதாகின்றது. குஞ்சுகளின் வளர்ச்சியும் நன்றாக இருக்கும்.

இளம்கோழிக்குஞ்சுகளுக்கு முதல் 5-7 நாட்களுக்கு நன்றாகக் கொதித்து ஆறவைத்த குடிநீரக் கொடுக்கவண்டும். மேலும் 1 லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் பொடிசெய்த சீரகத்தைக் கலந்து கொத்திக்கவைத்து ஆறிய பின் கோழிகளுக்குக் வாரம் இருமுறை கொடுப்பதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கலாம். பண்ணையில் பயன்படுத்தப்படும் குடிநீரைப் பரிசோதணை செய்து பயன்படுத்துதல் நன்று. குடிநீரில் கிருமிநாசி சேர்த்து பயன்படுத்துவது சாலச்சிறந்தது.

மேற்கூறிய வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் குஞ்சுகளில் இறப்பினைத் தடுக்கலாம்.

நாட்டுக் கோழிகளை தாக்கும் நோய்களும் தடுப்பு முறைகளும்

எஸ். சிவசீலன், பேராசிரியர் மற்றும் தலைவர்
கால்நடை பல்கலைக்கழகப் நோய் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், மதுரை

1. வெள்ளைக் கழிச்சல் நோய்

இராணிக்கெட் என்று சொல்லப்படும் இந்த வெள்ளைக்கழிச்சல் நோயானது வைரஸ் எனப்படும் நச்சுயிரியினால் ஏற்படுகிறது. இந்நோய் வெய்யில் அதிகமான சித்திரை மற்றும் வைகாசி மாதங்களில் அதிக அளவில் ஏற்பட்டாலும் ஆண்டு முழுவதும் இந்நோய் தாக்குகிறது. நாட்டுக்கோழிகளை கடுமையாக பாதிப்பது இந்நோய் மட்டுமே. இந்நோயின் அறிகுறிகளை பாதிக்கப்பட்ட கோழிகள் வெள்ளையாக கழிவதன் மூலமும், கொக்கு போல் குறுகிக் கொண்டு தீவனம் மற்றும் தணணீர் குடிக்காமல் இருப்பதை வைத்தும் அறிந்துகொள்ளலாம். மேலும், குஞ்சுகளின் கண்களில் நீர்க்கோர்த்தும். நரம்பு பாதிக்கப்பட்ட கோழிகள் கால்களை இழுத்துக் கொண்டும், கழுத்தைத் திருகிக் கொண்டும் தீவனம் உண்ணாமல் இருந்து இரண்டு அல்லது மூன்று நாட்களில் இறந்துவிடும். முதலில் கிராமத்தில் ஒரு வீட்டு கோழிகளுக்கு வந்த நோயானது மற்ற வீட்டுக் கோழிகளுக்கும் பரவி கிராமம் முழுவதும் உள்ள கோழிகளில் இறப்பை ஏற்படுத்தி விடும்.

இந்நோய் வந்தபின் மருத்துவம் செய்வதில் எந்த பயனுமில்லை, வருமுன் காப்போம் என்ற பழமொழிக்கேற்ப தடுப்பூசி போட்டுக்கொள்வதே ஒரெ வழி. இந்நோயை தடுக்க, குஞ்சு பொரித்த 5 முதல் 10 நாட்களுக்குள் லசோட்டா எனப்படும் தடுப்பூசி மருந்தை கண்ணில் சொட்டு மருந்தாக விட வேண்டும். அடுத்து குஞ்சுகள் 8 வார வயதை அடைந்தவுடன் ஆர்.டி.வி.கே எனப்படும் ஊசி மருந்தை இறக்கையில் போட வேண்டும். இந்த கோழி ஊசி மருந்தினை அனைத்து கால்நடை மருத்தவமனைகளிலும் இலவசமாக போட்டு இந்த நோயிலிருந்து காப்பாற்ற முடியும். இருப்பினும், பாதிக்கப்பட்ட கோழிகளை அடித்து நன்கு வேக வைத்து சமைத்து சாப்பிடுவதால் நமக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது மற்றும் அதுவே சரியான முறையாகும்.

2. கோழி அம்மை

மனிதர்களுக்கு வரும் அம்மை கொப்புளங்கள் போல பாதிக்கப்பட்ட கோழிகளின் தலை, கண் மற்றும் கொண்டை பகுதிகளில் கொப்புளங்கள் தோன்றும். வைரஸ் கிருமிகளால் பரவம் இந்நோய் நாட்டுக் கோழிகளைத் தாக்கும் தொற்று நோய்களில் இதுவும் முக்கியமானதாகும். பாதிக்கப்பட்ட கோழிகளில் கண் பகுதியில் கொப்புளங்கள் ஏற்படும்போது கண் பார்வை மறைந்து தீனி எடுக்க முடியாமல் போகிறது. இந்நோயானது வளர்ந்த பெட்டை மற்றும் சேவல் கோழிகளில் அதிக இறப்பை ஏற்படுத்தாவிட்டாலும் குஞ்சுகளில் இறப்பை ஏற்படுத்தும். வேப்பமர இலைகளை அரைத்து மஞ்சளுடன் கலந்து கொப்பளங்கள் மீது தடவலாம். எனினும் இந்நோயைத் தடுக்க கோழி குஞ்சுகளுக்கு 3 முதல் 6 வார வயதில் தடுப்பூசி போட வேண்டும்.

3. குடற்புழுக்களின் தாக்கம்

அஸ்காரிடியா எனப்படும் உருண்டை புழுக்களும் ரைலட்டினா எனப்படும் நாடாப்புழுக்களும் நாட்டுக்கோழிகளை அதிகம் தாக்குகின்றது. இவ்வகை புழுக்கள் கோழிகளின் குடலைத் தாக்கி கழிச்சலை உண்டாக்கும். இதனால் கோழிகள் மெலிந்து உடல் வளர்ச்சி குன்றி காணப்படும். இவ்வகை புழுக்களின் முட்டைகள் மற்றும் முதிர்ந்த பகுதிகள் பாதிக்கப்பட்ட கோழிகளிலிந்து வெளியேறி இடைநிலை இளம் புழுக்களாக மாறி மற்ற கோழிகளுக்கும் பரவுகிறது. இதனைக் கட்டுப்படுத்த புழு வகைக்கேற்ப பைப்ரசின் என்ற மருந்தை உருண்டை புழுக்களுக்கும் நிக்லோசமைடு மற்றும் அல்பெண்டசோல் மருந்துகளை கோழிகளுக்கு கொடுத்து நாடாப்புழுக்களை நீக்கலாம்.